தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 11, சர்வஜித் – திருவள்ளுவர் ஆண்டு 2038

2007 ஏப்ரல் 24, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இடுக்கண் படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்."

தெளிவான அறிவும் உறுதியும் கொண்டவர்கள், துன்பத்திலிருந்து விடுபடுவதற்காகக்கூட இழிவான செயலில் ஈடுபடமாட்டார்கள்.

1. இரங்கற் குறிப்பு

முன்னாள் உறுப்பினர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரங்கற் குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. தி. இரா. கஜபதி அவர்கள் 23-4-2007 அன்று மறைவுற்ற செய்தியை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன். திரு. தி.இரா. கஜபதி அவர்கள் ஆற்காடு சட்டமன்றத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1989 முதல் 1991 வரை சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்கள்.*

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால், அவரைப் பிரிந்து வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)